ஆண்டறிக்கை - 2020

இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்

தூர நோக்கு

ஆரோக்கியமான மக்கள் சமுதாயத்தின் பொருட்டு தேசிய மருத்துவவியலின் அடையாளத்தைப் பேணி தேசிய மற்றும் சர்வதேச மருந்துகளின் தேவைகளை பூரணமாக்கி தரமான சேவைகளை வழங்கும் முன்னோடி நிறுவனமாதல்.

செயற்பணி

உயர் தரத்துடனான் ஆயுர்வேத மருந்து உற்பத்தி, இறக்குமதி, விநியோகித்தல், ஆராய்ச்சி சேவைகளை வழங்குதல் மற்றும் இதனைப் பாதுகாப்பதன் மூலம் மக்கள் தேவைகளை பூர்த்தியாக்குவது மட்டுமன்றி ஊழியர் அபிவிருத்தியை ஏற்படுத்துதல் மற்றும் சமூக நலன்களை நிறைவேற்றி ஆரோக்கியத்துடனான மக்கள் சமுதாயத்தின் பொருட்டு முன்னோடியாகச் செயற்படுதல்.

தலைவரின் செய்தி



கடந்த 51 ஆண்டுகளில், பல தடைகளைத் தாண்டி, அளவு மற்றும் தரம் வாய்ந்த உற்பத்தியை மேம்படுத்தி கடந்த சில ஆண்டுகளாக இந்தக் கூட்டுத்தாபனம் லாபம் ஈட்டியுள்ளது. சமீப வருடங்களில், திறைசேரிக்கு செலவினத்தை ஏற்படுத்தாது தனது மீண்டுவரும் செலவுகளுக்குத் தேவையான ஒதுக்கீடுகளை நிறுவனத்தின் ஊடாகவே எந்தவித செலவினமும் இன்றி வழங்க முடிந்தது.

2019 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து காணப்பட்ட கோவிட்-19 தொற்றுநோய் நாட்டின் உற்பத்தியையும், ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியையும் மோசமாகப் பாதித்துள்ளது. இதனால், ஆண்டு ஆரம்பம் முதல் பல மாதங்களாக தொடரும் பயணக் கட்டுப்பாடுகளால், காய்ந்த இஞ்சி, மஞ்சள், கத்தரி, ஹீன் அரட்ட போன்ற உற்பத்திக்கான மூலப்பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் உற்பத்தி பணிகளுக்காக அதிக செலவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

நாட்டில் நிலவும் நிலைமை மற்றும் கௌரவ சனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைக்கு அமைவாக, சுதேசத்துக்கு முன்னுரிமை அளித்து, உள்ளூர் மூலப்பொருட்களை உள்நாட்டில் பெற்றுக்கொள்ளும் வகையில், சமூக ஊடக வலையமைப்பைப் பயன்படுத்தி மருந்துகளை சேகரிப்பதற்கும் கூட்டுத்தாபனத்தின் மூலிகைச் செய்கையை மேலும் விரிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தோம். முக்கிய மூலப்பொருளான உலர் இஞ்சி கூட்டுத்தாபனம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்ததன் மூலம் எங்களால் உயர்தர உற்பத்தியை பொதுமக்களுக்கு வழங்க முடிந்தது.

கோவிட்-19 தொற்றுநோய் இருந்தபோதிலும், சில நாட்களைத் தவிர உற்பத்தியை அதிகபட்சமாகப் பராமரித்தோம், அதே நேரத்தில் விற்பனையையும் அதிகரித்தோம். இதன் போது கௌரவ சுகாதார அமைச்சரினால் நியமிக்கப்பட்ட " கொரோனா அனர்த்தத்தை தடுப்பதற்கான சுதேச மருத்துவ முறை தொடர்பிலான தேசியக் குழு"வின் சிபாரிசின் பேரில் உற்பத்தி செய்யப்பட்ட (நோயெதிர்ப்பு கசாயம், பேயாவ - (Herbal Mouth Wash), Covid – 19 நீராவி பிடித்தல், Venivel Hand Wash, Ethokomarika Hand Sanitizing Gel) போன்ற உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கும், 2020 யூன் மாதம் அதிக தயாரிப்புகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய முடிந்தமை அதிஷ்டாமாகும். Ethokomarika Hand Sanitizing Gel அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது தினமே நாட்டின் முக்கிய வர்த்தக வங்கிக்கு 5L பொதி 350 விற்பனை செய்யப்பட்டு 1.75 மி.ரூபா வருமானத்தை ஈட்ட முடிந்தது..

சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் 2020 ஆகஸ்ட் மாதம் மக்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க அறிமுகப்படுத்தப்பட்ட "சுவதரணி" நோய் எதிர்ப்பு சக்தி போயாவ சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

நிறுத்தப்பட்டிருந்த பயன்படுத்திய போத்தல்களை கழுவி சுத்தம் செய்து மீண்டும் பயன்படுத்தல் ஆரம்பித்ததன் மூலம் போத்தல்களின் விலை உயர்வை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சு மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்களுடன் பரஸ்பர ஊழியர் உறவுகளை மேம்படுத்துவதன் மூலம் நிறுவன நடவடிக்கைகளை மிகவும் திறமையாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்ள முடிந்தது.

பல தடைகள் இருந்தாலும் நட்டம் ஏற்படாமல் 2019 லாபத்தை விட 10 மடங்கு லாபம். 2020 ஆம் ஆண்டில் ஈட்ட முடிந்ததுடன் எனது முயற்சிகளுக்கு உதவிய கௌரவ சுகாதார அமைச்சர், இராஜாங்க அமைச்சர், செயலாளர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் உட்பட பணிப்பாளர் சபைக்கும், பொது முகாமையாளர் உள்ளிட்ட கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்..

சட்டத்தரணி சாகலா அபயவிக்ரம
தலைவர்
இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்

பணிப்பாளர்கள்

சட்டத்தரணி (திருமதி) சாகலா அபயவிக்ரம

திருமதி சாகலா அபயவிக்ரம இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவியாக 27.12.2019 முதல் கடமையாற்றி வருவதுடன், 50 வருட வரலாற்றில் கூட்டுத்தாபனத்தின் முதலாவது தலைவியும் ஆவார். இலங்கை சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்ற பின்னர், தொழில்முறை சட்டத்தரணியாக 17 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைப் பெற்றுள்ளார். அவர் DFCC வங்கியின் சட்ட அதிகாரியாகவும் இருந்துள்ளார் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிச் செயலாளராகவும் நிறைவேற்று உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

திரு. சாந்த லியனகே

திரு. சாந்த லியனகே அவர்கள் 17.01.2020 முதல் இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார். அவர் கூட்டுறவு முகாமைத்துவ பயிற்சி நிறுவனத்தில் கிராமிய வங்கியியல் டிப்ளோமா பெற்றுள்ளார் மற்றும் இலங்கை மத்திய வங்கி உட்பட பல நிறுவனங்களில் பாடநெறிகளில் பங்கேற்றுள்ளார். நிதித்துறையில் தனது 23 ஆண்டுகளுக்கும் மேலான சேவையின் போது, அவர் Seeds Gurantee LTD இல் உதவி முகாமையாளராகவும் / மாவட்ட திட்ட முகாமையாளராகவும், சர்வோதய அபிவிருத்தி நிதிக் கம்பனியின் வலய முகாமையாளராகவும் சிரேஷ்ட முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார். அவர் தற்போது சப்ரகமுவ மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் பணியாற்றுகின்றார்.

திருமதி. எச்.டபள்யு.எம். புஸ்பலதா மெனிகே

திருமதி புஸ்பலதா மெனிகே 1991ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையில் இணைந்து 1998ஆம் ஆண்டு உதவி பிரதேச செயலாளராக பொது நிர்வாக சேவையில் இணைந்துகொண்டார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்தில் இளங்கலைப் பட்டத்தையும், களனிப் பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் முதுகலைப் பட்டத்தையும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்தில் முதுகலை டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். தனது 29 வருட அரச சேவையில் பிரதேச செயலகங்கள், திணைக்களங்கள் உட்பட பல அரச நிறுவனங்களில் சேவையாற்றியுள்ளார். அவர் தற்போது சுதேச மருத்துவ மேம்பாடு, கிராமப்புற மற்றும் ஆயுர்வேத மருத்துவமனை அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளராக (விசேட தரம்) பணியாற்றி வருகிறார்.

திரு.எம்.எச்.மொகமட் சமீல்

திரு. சமீல் அரச சேவையில் 21 வருட அனுபவமுள்ளவர் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை கலைப் பட்டமும், இந்தியாவின் புதுடில்லி குருகோபின் இந்திரபிரசாத் பல்கலைக்கழகத்தில் மனிதவள மேம்பாடு மற்றும் வடிவமைப்பில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார். திரு. சமீல் ஆட்பதிவுத் திணைக்களம், கல்விச் சேவைகள் குழு, அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, ஓய்வூதியத் திணைக்களம், சமூக சேவைகள் அமைச்சு, முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளாதுடன் பொதுத்திறைசேரியில் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாகவும் சேவையாற்றியுள்ளார்.

திரு. பந்துசேன டயஸ் தஹநாயக்க

1980 ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபராக கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் பல அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களில் கடமையாற்றி சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளராக 2012 இல் ஓய்வுபெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப் பிரிவில் இளங்கலைப் பட்டமும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றவர். அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் அதிகாரப்பகிர்வு மற்றும் உள்ளூராட்சி தொடர்பான முதுகலை டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார்.

திரு. பிரதீப் ஏ பீரிஸ்

Asia e University – Malaysia நிறுவனத்தில் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற அவர், கலாநிதி பட்டம் பெறும் பணியில் ஈடுபட்டுள்ளார். சரக்கு, கப்பல் மற்றும் சேமிப்பு ஆகியவற்றில் 31 வருட அனுபவம் உள்ளது. Colombo Logistic கூட்டுத் தொழில்முயற்சியின் கூட்டுப் பணிப்பாளராக /பொதுமுகாமையாளராக சேவையாற்றுவதுடன் The Lions Sightfirst Eye Hospital நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினராகவும் சேவையாற்றுகின்றார்.

திரு.எஸ்.கே.டபள்யு.ஜீ. குருசிங்க

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ நிறுவனத்தில் ஆயுர்வேத மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை (B.A.M.S) பட்டம் பெற்றுள்ளார். பின்னர் மருத்துவப் பணியில் சேர்ந்த அவர், Aitken Spence நிறுவனத்துக்குச் சொந்தமான மாலைதீவில் உள்ள மீதுப்பாரு சுற்றுலா விடுதியில் உள்ள ஆயுர்வேத மருத்துவ மையத்தில் ஆயுர்வேத மருத்துவராகப் பணியாற்றினார். பின்னர் அதே நிறுவனத்திற்குச் சொந்தமான நெப்டியூன் ஆயுர்வேத ஹோட்டலில் ஆயுர்வேத வைத்தியராகப் பணிபுரிந்த அவர் இரத்தினபுரி, எஹலியகொட மற்றும் கரந்தன ஆகிய இடங்களில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் சேவையாற்றியுள்ளார். தற்போது மஹரகம நகரசபையின் இலவச ஆயுர்வேத மருந்தகத்தில் ஆயுர்வேத வைத்திய அதிகாரியாக கடமையாற்றி வருகின்றார். இவர் தற்போது யக்கல விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தில் இயன்மருத்துவத்தில் முதுகலைப் பட்டதாரி டிப்ளோமா படிப்பை முடித்துள்ளார். இவர் பத்தேகம பிரதேசத்துடன் தொடர்புடைய திவித்துறை வைத்திய குடும்பத்தைச் சேர்ந்தவருமாவார்.

உள்ளடக்கம்

பணிப்பாளர் சபை அறிக்கை	-	01 - 17
நிறுவனக் கட்டுப்பாட்டு அறிக்கை	-	18 - 19
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	-	20 - 29
நிதி நிலைமை பற்றிய கூற்று	-	30
வருமானக் கூற்று	-	31 - 32
நிதிப் பாய்ச்சல் கூற்று	-	33
அரசபாக மூலதன மாற்றம் தொடர்பான கூற்று	-	34
கணக்குக் கொள்கைகள	-	35 - 44
கணக்குகள் தொடர்பான குறிப்புகள்	-	45 - 61
கடந்த 10 ஆண்டுகளில் முக்கிய நிதி விபரங்கள்	-	62

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் - பணிப்பாளர் சபை அறிக்கை – 2020 ஆம் ஆண்டு

01. அறிமுகம்

1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் 1969 மே 11 ஆந் திகதி 14853/3 இலக்க இலங்கை அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஆம் இலக்க 142 வது பிரிவுக்கு அமைவாக 2020.12.31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பிலான அறிக்கையை பின்வருமாறு சமர்ப்பிக்கின்றேன்.

02. பிரதான நோக்கங்கள்

1. ஆயுர்வேத மருந்து வகைகள், மருந்துப் பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்து உற்பத்திக்கு, விற்பனைக்கு மற்றும் விநியோகிப்பதற்கான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
2. அத்தியாவசிய ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி (பச்சை மற்றும் உற்பத்தி மருந்துகள் ஆகிய இரண்டு வகைகளும்) இறக்குமதி செய்தல் மற்றும் அவ்வாறான மருந்து வகைகளை விற்பனை செய்தல் அத்துடன் விநியோகித்தல்.
3. உள்நாட்டில் தயாரிக்கப்படும் மூல ஆயுர்வேத மருந்துகளை வாங்குவது மற்றும் அத்தகைய மருந்துகளை தயாரித்தல்.
4. ஆயுர்வேத மருந்துகள் பற்றிய அறிவியல் மற்றும் மூலிகை ஆராய்ச்சி மற்றும் அத்தகைய மருந்துகளின் தரப்படுத்தல்.
5. ஆயுர்வேத மருந்தகங்களை பராமரித்தல் மற்றும் மருந்துகள் உற்பத்திக்கு தேவையான ஆயுர்வேத மருந்துகளின் உள்ளூர் மருந்துகளை உற்பத்தி செய்தல்.
6. ஆயுர்வேத மருந்துகளின் உற்பத்திக்குத் தேவையான தூய பசுநெய் உற்பத்தி செய்ய தூய பசும்பாலைல் பெற மாட்டுப் பண்ணைகளைப் பராமரித்தல்.
7. தேன் உற்பத்தி மற்றும் தேனீ வளர்ப்பு மற்றும் தேனீ வளர்ப்பை மருந்துகள் தயாரிப்பதற்கு தேவையான வீட்டுத் தொழிலாக உருவாக்குதல்.

03. தாபன விபரங்கள்

3.1 தலைமை அலுவலகம் மற்றும் உற்பத்திக்கூடம்

இலக்கம் 94, பழைய கொட்டாவ வீதி, நாவின்ன என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

3.2 விற்பனை நிலையங்கள்

நாவின்ன	:	இல 94 பழைய கொட்டாவ வீதி, நாவின்ன மகரகம
விஜேராம (கிளினிக்குகளுடன்	:	இல 22 ஸ்ரீ சோரத மாவத்தை கங்கொடவில, நுகெகொட
கண்டி (கிளினிக்குகளுடன்)	:	இல 70 யட்டிநுவர வீதி, கண்டி
தியதலாவ	:	சனானி மந்தீரய, தியதலாவ
அனுராதபுரம்	:	விளையாட்டுத் திடல் வீதி, வங்கிப் பிரதேசம், அனுராதபுரம்
பதுளை	:	பீ 35 – 36 முதலாவது மாடி, பஸ் தரிப்பு நிலையம் பதுளை
கோட்டை	:	2 வது மேடை, கோட்டை புகையிரத நிலையம், கோட்டை
இரத்தினபுரி	:	இல 32, பஸ் தரிப்பு நிலைய வீதி, இரத்தினபுரி
மாத்தறை	:	இல 43, பழைய தங்காளை வீதி, கொட்டுவேகொட, மாத்தறை
யாழ்ப்பாணம்	:	இல. 169, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
காலி	:	இல. 38 ஒல்கொட் மாவத்தை, காலி
மொணறாகல	:	இல 267, வெல்லவாய வீதி, மொணறாகல
பொரளை	:	ஆயுர்வேத தேசிய போதனா மருத்துவமனை, கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை பொரளை
மாத்தளை	:	இல. 614-C , திருகோணமலை வீதி, மாத்தளை
ஜாஎல	:	இல 18 கப்புவத்த, ஜாஎல
பேருவளை	:	முதலாவது மாடி கூட்டுறவு மாளிகை பேருவளை
மேல் மாகாண சபை	:	இல. 204 முதலாவது மாடி, மேல் மாகாண சபை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல

3.3 கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் நாயகம், இலக்கம்:306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்ல.

3.4 வங்கி

மக்கள் வங்கி மற்றம் இலங்கை வங்கி

04. பணிப்பாளர் சபை

1	சட்டத்தரணி (திருமதி.) சாகலா அபயவிக்ரம	-	தலைவர்
2	திரு. சாந்த லியனகே	-	முகாமைத்துவப் பணிப்பாளர்
3	திரு. எச்.எம்.சமீல்	-	பணிப்பாளர் சபை உறுப்பினர்
4	திருமதி எம்.டபள்யு.எம். புஸ்பலதா மெனிகே	-	பணிப்பாளர் சபை உறுப்பினர்
5	திரு.பந்துசேன தஹநாயக்க	-	பணிப்பாளர் சபை உறுப்பினர்
6	திரு.பிரதீப் பீரிஸ்	-	பணிப்பாளர் சபை உறுப்பினர்
7	மருத்துவர் (திரு) எஸ்.கே.டபள்யு.ஜீ. குருசிங்க	-	பணிப்பாளர் சபை உறுப்பினர்

05. நிறைவேற்று உத்தியோகத்தர்கள் சபை

1	தலைவர்	-	திருமதி சாகலா அபயவிக்ரம
2	முகாமைத்துவப் பணிப்பாளர்	-	திரு, சாந்த லியனகே
3	பொதுமுகாமையாளர் (ப.க)	-	திரு.கே.டீ.எம்.ஏ. சந்திரசேகர
4	உதவிப் பொதுமுகாமையாளர் (தொழிற்சாலை)	-	திரு.கே.டீ.எம்.ஏ. சந்திரசேகர
5	உதவிப் பொதுமுகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிருவாகம்)	-	திரு.எச்.ஆர்.பீ.ஸ்ரீயந்த திசேரா
6	உதவிப் பொதுமுகாமையாளர் (நிதி)	-	திரு.எம்.ஜீ.கயான் தக்சில
7	பிரதான மருத்துவ உத்தியோகத்தர் (ப.க)	-	திருமதி, கே.ஏ.சீ.டீ. கொடிகார
8	முகாமையாளர் - சந்தைப்படுத்தல் (அரச)	-	திரு. பீ.எஸ் காரியவசம்
9	முகாமையாளர் - நிதி	-	திரு. கெலும் பத்திரவசம்
10	மருத்துவ உத்தியோகத்தர்	-	திருமதி. எம்.கே.என். குணசேகர
11	முகாமையாளர் - திட்டமிடல்	-	திரு. ஜகத் கோரலகே
12	மருத்துவ உத்தியோகத்தர்	-	திருமதி.ஏ.எம்.புஸ்பிகா அத்தநாயக்க
13	முகாமையாளர் - திட்டமிடல் (ப.க)	-	திரு. கெலும் பத்திரவசம்
14	முகாமையாளர் - மனித வளங்கள்	-	திருமதி நிலானி விஜேசிங்க
15	மருத்துவ உத்தியோகத்தர்	-	திருமதி.டீ.கே.லியனகே
16	முகாமையாளர் - சந்தைப்படுத்தல் (தனியார்)	-	திரு.எச்.எம்.டீ.டீ.தனஞ்ஜய
17	மருத்துவ உத்தியோகத்தர்	-	திருமதி.ஏ.எம். பமோதனி மாரசிங்க
18	முகாமையாளர் - தரக்கட்டுப்பாடு	-	திரு.கே.ஏ.எச்.கே.கஸ்தூரிஆரச்சி
19	முகாமையாளர் - செலவினங்கள்	-	திருமதி ஏ.டீ.எஸ். பிரேமசிங்க
20	முகாமையாளர் - தொழிற்சாலைகள் (ப.க) (2020.07.10 ஆந் திகதி வரை)		திரு.அனுர திலகரத்ன

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

1.	உள்ளகக் கணக்காய்வாளர்	-	செல்வி.ஏ.டீ.என்.கே.பிரேமரத்ன

06. <u>பதவியணி குழாம்</u>


2020 ஆண்டின் பதவியணிக் குழாம்

பதவிப் பெயர்	அலுவலகம்	உற்பத்திக்கூடம்	விஜேராம	நாவின்ன	கண்டி	தியதலாவ	பதுளை	அனுராதபுரம்	புறக்கோட்டை	மாத்தறை	இரத்தினபுரி	மொணராகல	காலி	பொரளை	யாழ்ப்பாணம்	மாத்தளை	பேருவளை	ஜாஎல	மல்மாகாணம்	நிகவெரட்டி மூலிகைத் தோட்டம்	மதவாச்சி மூலிகைத் தோட்டம்	தங்கொல்ல மூலிகைத் தோட்டம்	மொத்தம்
சிரேஷ்ட முகாமையாளர்கள்	02	01																					03
முகாமையாளர்கள்	08	07																					15
கனிஷ்ட முகாமையாளர்கள்	14	01																					15
முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தொழல்நுட்ப உத்தியோகத்தர்கள்	03	11																					14
முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தொழில்நுட்பம் சாராத உத்தியோகத்தர்கள்	39	22	01	01	01	01	01	01	01	01	01	01	01	01	01	01	01	01	00	01	01	01	80
ஆரம்ப வகுதி ஒளவு தேர்ச்சியுள்ள உத்தியோகத்தர்கள்		09																					09
ஆரம்ப வகுதி தேர்ச்சியுள்ள உத்தியோகத்தர்கள்		16																					16
ஆரம்ப வகுதி தேர்ச்சி இல்லாத உத்தியோகத்தர்கள்	17	120	02	01	02	01	01	03	01	01	01	01	01	01	01	01	01	01	02	00	01	01	161
ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள்																							00
அமய தொழிலாளி -தற்காலிக தொழிலாளி		08																		19		05	32
மொத்தம்	83	195	3	2	3	2	2	4	2	2	2	2	2	2	2	2	2	2	2	20	2	7	345

07. செயலாற்றுகை


மொத்தத் திரும்பல்

கடந்த தசாப்தத்தில் தொடர்ந்து வளர்ந்து வரும் விற்பனை, "கோவிட்-19" அச்சுறுத்தலின் முகத்தில் 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து சுமார் 4.2% குறைந்துள்ளது. ஆண்டு முழுவதும் அவ்வப்போது பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் பாதகமான வானிலை இருந்தபோதிலும், விற்பனையை அதிகரிக்க நாங்கள் உழைத்துள்ளோம். குறிப்பாக, கோவிட் வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் மக்களின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க பல புதிய தயாரிப்புகளை சந்தையில் அறிமுகப்படுத்துவதன் மூலம் எங்களின் தயாரிப்புகளின் பல்வகைப்படுத்தலை விரிவுபடுத்தி விற்பனையை அதிகரிக்க முடிந்தது.




உற்பத்தி

அவ்வப்போது பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் ஆண்டு முழுவதும் ஏற்படும் அவசரநிலைகள் உற்பத்தியை பராமரிப்பதை கடினமாக்கியது. ஆயுர்வேதப் பொருட்களுக்கான தேவை அதிகரித்ததாலும், அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருளைத் தயாரிப்பதற்குப் போதுமான மூலப் பொருட்களைப் பெறுவதில் உள்ள சிக்கல்களாலும் இது ஏற்பட்டது. மேலும், தொழிற்சாலை ஊழியர்கள் நாளுக்கு நாள் கோவிட் வைரஸுக்கு ஆளாகியுள்ளனர், அவர்களுக்குத் தேவையான பராமரிப்பைக் கொடுத்து உற்பத்தியைத் தொடர வேண்டியிருந்தது. அனைத்து தடைகளையும் மீறி, ஜூன் 2020 இல், கூட்டுத்தாபனத்தின் 51 ஆண்டுகால வரலாற்றில் அதிக உற்பத்தி மதிப்பை பதிவு செய்ய முடிந்தது.



வரிக்குப் பிறகு நிகர லாபம்

கடந்த பத்து வருடங்கள் லாபத்தில் பெரிய மாற்றங்களைக் காட்டியிருந்தாலும் அந்த ஆண்டுகளில் எந்த இழப்பும் இல்லை. 2020 ஆம் ஆண்டில் நிறுவனம் ‘ரூ.6.1 மில்லியன் லாபம் ஈட்டியுள்ளது, இது முந்தைய ஆண்டை விட பத்து மடங்கு அதிகமாகும்.



08 ஊழியர்களுக்கான ஊக்குவிப்புப் படி மற்றும் நலநோம்புகைகள்

8.1 ஊழியர்களை ஊக்குவித்தல்

சிறந்த ஆக்கபூர்வமான மற்றும் வினைத்திறன் வாய்ந்த சேவைக்காக அனைத்து ஊழியர்களுக்கும் கீழே காட்டப்பட்டுள்ள படிகள் வழங்கப்படுகின்றன.

- வருகை தரு ஊக்குவிப்புப் படி
- உற்பத்தி அடிப்படையிலான உற்பத்தி ஊக்குவிப்புப் படி
- உற்பத்தித்திறன் படி
- வருடாந்த ஊக்குவிப்புப் படி

8.2 ஊழியர் நலநோம்புகைகள்

எங்கள் கூட்டுத்தாபன ஊழியர்களின் நலனுக்காக பின்வரும் திட்டம் தற்போது செயல்படுத்தப்படுகிறது.

- உற்பத்தி பணியில் நேரடியாக ஈடுபடும் அனைத்து ஊழியர்களுக்கும் விற்பனை நிலையத்தின் ஊழியர்களுக்கும் சீருடை வழங்கப்படுகிறது.
- அனைத்து ஊழியர்களுக்கும் காலை உணவோடு தேநீர் வழங்கவும், அதற்காக ஒதுக்கப்படும் தொகையை ஒரு நாளுக்கு ‘ரூ.50.00லிருந்து ‘ரூ.60.00 ஆக உயர்த்தவும். மற்றும் பணிப்பாளர் சபையின் முடிவுப்படி இரவு நேரங்களில் பணியாற்றிய ஊழியர்களுக்கு இரவு உணவு வழங்குதல்.
- இறுதிச் சடங்குகளின் போது ஊழியர்களுக்கு வழங்கப்படும் வசதிகளை முறைப்படுத்துதல் மற்றும் இறுதிச் சடங்கு கொடுப்பனவு 5,000.00 ‘ரூபாயில் இருந்து 6,500.00 ‘ரூபாயாக அதிகரிப்பு.
- இறுதிச் சடங்குகளில் தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குவது உள்ளிட்ட பிற வசதிகளை வழங்குதல்.
- ஏப்ரல் மாதம் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு அனைத்து ஊழியர்களுக்கும் ரூ .5,500.00 தொடக்கம் 6,000.00 ரூபா வரை அதிகரிக்கச் செய்து அனைத்து ஊழியர்களுக்கும் வழங்குதல்.
- வருடாந்த சுற்றுப்பயணத்திற்காக ஒதுக்கப்படும் 10 இலட்சம் ‘ரூபாவை 15 இலட்சம் ‘ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்.

8.3 நிறுவன சமூகப் பொறுப்பு

இது தொடர்பாக ஏற்கனவே உள்ள சுற்றறிக்கைகளுக்கு இணங்க 2020 ஆம் ஆண்டில் இதற்காக எந்த செலவும் செய்யப்படவில்லை.

09. மருந்து உற்பத்திகள் அலகுகளாக பின்வருமாறு

	மூலிகையின் பெயர்	அலகு	2020 ஆண்டு	2019 ஆண்டு	2018 ஆண்டு	2017 ஆண்டு	2016 ஆண்டு
1	அரிஸ்டம் / வைன்	மி.லீ.750	97,084	107,038	89,400	101,086	99,917
2	ஆசவம்	மி.லீ.750	75,174	96,920	88,223	82,594	97,074
3	குவாதம்	மி.லீ.750	108,655	81,730	82,200	74,714	78,865
4	சிரப்	மி.லீ.750	23,616	48,442	22,629	18,810	23,184
5	தைலம்	மி.லீ.750	160,621	198,593	183,608	176,600	106,861
6	சூரணம்	கி.கி	26,110	26,299	24,880	26,428	21,972
7	கல்கம்/லேகம்/லேபம்/மோதகம்	கி.கி	17,483	22,810	20,092	22,668	17,407
8	ரச	கி.கி	1,570	2,395	3,365	2,832	3,423
9	வடிகா/ குங்குளி	கி.கி	11,889	15,637	16,176	13,325	11,822
10	**புதியஉற்பத்திகள் 01**						
	(1) ரணஹங்ச ரசாயணய	கி.கி	3,935	-	-	7	-
	(2) திரிபலா வில்லை	கி.கி	1,293	1,095	852	459	1,459
	(3) மேதஹரணி வில்லை	கி.கி	821	-	1,385	568	692
	(5) ஜீவாலேப பாம்	கி.கி	212	**339**	5,405	15	542
	(6) மதுமேஹ ஹரனி வில்லை	கி.கி		985	-	-	-
11	**புதிய உற்பத்திகள்**						
	(1) தெம்பும் சாறு	கி. 05	115,800	161,585	139,470	164,360	80,600
	(2) பேயாவ	கி. 05	500,770	420,180	306,470	309,324	282,200
	(3) பஸ் பங்குவ	கி. 50	89,950	110,060	132,330	115,289	29,889
	பஸ் பங்குவ	கி.கி	95				
	(4) கோமாரிகா சம்பு	லீ		-	-	1	-
	கோமாரிகா சம்பு	மி.லீ.95	55,631	34,918	22,961	18,675	16,408
	(5) நன்னாரி தூள்	கி.கி	10	-	10	610	-
	(6) வில்வம் பட்டைத் தூள்	கி.கி	24	-	16	27	-
	(7) WENIWEL BODY WASH	5L	2				
	WENIWEL BODY WASH	1L		-	-	3	10
	WENIWEL BODY WASH	300ml	26,439	19,166	18,228	15,067	22,935
	WENIWEL BODY WASH	100ml	472	4,127	7,586	-	11,845
	WENIWEL BODY WASH	65ml	343	746	401	-	12,551
	WENIWEL BODY WASH	60ml		-	-	-	12,295
	(8) IRMUSU TEA BOX 25 BAGS	BOX	5,199	347	3,387	12,045	9,116
	(9) CINNAMON HERBAL TEA (NEW) 01 2g	BAG	9,727	9,168	10,252	292,225	12,790
	CINNAMON HERBAL TEA	250g		94	200	30	
	(10) KOTHALA HIMBUTU HERBAL TEA	50g	8,757	2,015	1,474	2,736	
	(11) RANAWARA HERBAL TEA BAG	2.5g		-	-	1,250	
	(12) BELI GETA ULUHAL HERBAL TEA BAG	2.5g		-	-	1,250	
	(13) CINNAMON CAPSULES 60 Nos	60Nos	149	3,907	1,474	6,306	3,290
	(14) INGURU KOTHTHAMALLI HERBAL TEA BAG	2.5g		-	-	1,250	
	(15) NELLI RASAKIAD HERBAL TEA BAG	2.5g	367				
	(16) MEDAHARANEE CAPSULES 60 Nos	60Nos	1,212	2,873	2,090	2,816	
	(17) KOTHALA HIMBUTU CAPSULES	60Nos	1,911	4,242	3,000	2,334	
	(18) ASHWAGANDA CAPSULES	60Nos	4,560	2,905	-	2,696	
	ASHWAGANDA CAPSULES	30Nos		-	-	626	
	(19) DHATHREE CAPSULES	60Nos	2,822	2,265	-	2,929	
	(20) SUDARSHAMA CAPSULES	60Nos	11,021	6,466	-	3,059	
	SUDARSHAMA CAPSULES	KG	272				
	(21) ALOE VERA HERBAL DRINK	5L		-	8	6	
	ALOE VERA HERBAL DRINK	200ml		2,729	7,799	1,411	669
	(22) NELLI HERBAL DRINK	200ml		-	-	1,527	508
	(23) CUCUMBER FACIAL WASH	5L		-	-	1	-
	CUCUMBER FACIAL WASH	100ml	702	4,946	1,607	4,495	3,116

	மூலிகையின் பெயர்	அலகு	2020 ஆண்டு	2019 ஆண்டு	2018 ஆண்டு	2017 ஆண்டு	2016 ஆண்டு
	CUCUMBER FACIAL WASH	50ml		2,495	980	1,851	4,781
	(23) PAPAYA FACIAL WASH	5L		-	1	1	-
	PAPAYA FACIAL WASH	100ml	10,182	4,922	1,404	4,778	3,047
	PAPAYA FACIAL WASH	50ml		2,884	3,474	2,429	3,502
	(24) SANDALWOOD FACIAL WASH	1L		-	-	1	
	SANDALWOOD FACIAL WASH	100ml	4,714	8,310	7,025	2,814	18,485
	SANDALWOOD FACIAL WASH	50ml		5,751	5,020	60	14,053
	(25) CARROT FACIAL WASH	100ml		947	3,491	456	
	(26) BEE HONEY	750ml		4			
	BEE HONEY	375ml		-		1	
	BEE HONEY	100ml		1,829			
	BEE HONEY	28ml		4,221			
	(27) ABA THEL	28ml	7,065	899	1,285	1,021	
	(28) ELAGI THEL	250ml	1,267	2,662	684	347	
	ELAGI THEL	100ml	7,250	4,671	2,848	5,053	
	ELAGI THEL	28ml	11,860	2,516	-	2,750	
	(29) ENDARU THEL	28ml	7,293	-	609	1,031	
	(30) KOHOBA THEL	750ml		-	-	1	
	KOHOBA THEL	28ml	6,532	839	971	792	
	(31) THALA THEL	250ml	3,002	2,696	4,031	3,574	
	THALA THEL	100ml	8,538	6,455	6,649	3,212	
	THALA THEL	28ml	6,117	5,164	3,287	3,378	
	(32) KOKUM POTHU POWDER	50g		-	-	43	
	SUDU HADUN POWDER	50g		-	-	46	
	(33) TOTOL BALANCE TEA BAG 2g	2g		-	-	30,000	
	(34) IRAMUSU POWDER	1KG	5	-	10	3	
	IRAMUSU POWDER	500g	3	-	-	4	
	IRAMUSU POWDER	250g	2	-	-	9	
	(35) Modaka	KG	2,153	-	1,208		
	(36) PANCHA WALKALA BODY WASH	300ml	3,598	4,429			
	PANCHA WALKALA BODY WASH	100ml	500	1,653			
	(37) ENDARU THEL	28ml	7,293	2,380			
	(38) MEE THEL	28ml	6,117	470			
	(39) RANAWARA MAL (DRIED)	250g	147				
	(40) BELI MAL (DRIED)	30g	2,857				
	(41) SUWADARANI PRATHISHAKTHI PANAYA	500g	1,904				
	SUWADARANI PRATHISHAKTHI PANAYA	50g	137,563				
	SUWADARANI PRATHISHAKTHI PANAYA TEA BAG	BOX	237				
	(42) COVID-19 DOOMAYANAYA	50g	22,741				
	(43) ETHO KOMARIKA HAND SANITIZING GEL	5L	372				
	ETHO KOMARIKA HAND SANITIZING GEL	300ml	4,591				
	ETHO KOMARIKA HAND SANITIZING GEL	50ml	2,275				
	ETHO KOMARIKA HAND SANITIZING GEL	65ml	8,571				
	(44) KAVALAGRAHA MOUTH WASH	10 pack	2,401				
	(45) WENIWWL HANDWASH	300ml	1,795				
	(46) PERUMLAYAM	10g	2,249				
	PERUMLAYAM	5g	3,048				
	(47) PRATHISHAKTHI WARDHAKA KASAYA	1KG	5,656				
	PRATHISHAKTHI WARDHAKA KASAYA	100g	3,851				
	PRATHISHAKTHI WARDHAKA KASAYA	30g	13,703				
	PRATHISHAKTHI WARDHAKA KASAYA	50g	12,068				
	(48) KAHA POWDER	250g	426				

10. அரச மற்றும் தனிப்பட்ட விற்பனை நிலையங்களுக்கு விற்பனை செய்யப்பட்ட மருந்துகளின் பெறுமதி பின்வருமாறு.

(மில் ரூபா)

	2020 ஆண்டு	2019 ஆண்டு	2018 ஆண்டு	2017 ஆண்டு	2016 ஆண்டு
அரச பிரிவு	517.46	585.63	541.48	492.59	450.06
விற்பனை நிலையம்					
விஜயராம வெத கெதர	7.22	5.90	6.68	5.06	8.44
நடமாடும் விற்பனை	22.85	20.75	21.69	2.21	20.74
கண்டி விற்பனை நிலையம்	9.60	8.27	6.63	6.75	7.18
தியத்தலாவ விற்பனை நிலையம்	4.03	2.66	5.30	3.18	3.53
அநுராதபுரம் விற்பனை நிலையம்	14.96	17.11	15.06	4.25	5.15
பதுளை விற்பனை நிலையம்	4.68	4.18	6.00	6.02	3.87
புறக்கோட்டை விற்பனை நிலையம்	4.03	4.24	5.12	5.26	4.85
நாவின்ன விற்பனை நிலையம்	26.04	10.67	11.49	13.50	14.57
இலக்கம் 008 களஞ்சியம்	4.89	0.46	1.41	2.13	9.24
இரத்தினபுரி விற்பனை நிலையம்	4.83	4.01	7.19	4.14	9.32
யாழ்ப்பாணம் விற்பனை நிலையம்	11.78	7.69	11.23	7.83	8.05
காலி விற்பனை நிலையம்	6.48	5.03	6.18	6.16	5.12
செத்சிறிபாய விற்பனை நிலையம்	1.38	1.85	3.44	2.68	3.37
மொனராகலை விற்பனை நிலையம்	5.46	3.67	4.49	2.45	1.93
மாத்தறை விற்பனை நிலையம்	9.47	6.14	7.11	4.86	3.73
பெரளை விற்பனை நிலையம்	8.09	7.73	8.17	5.99	2.01
மாத்தளை விற்பனை நிலையம்	3.90	3.51	4.33	3.28	-
அளுத்கம விற்பனை நிலையம்	1.07	3.00	2.01	-	-
ஜாஎல விற்பனை நிலையம்	2.26	2.46	0.84	-	-
மேல் மாகாண விற்பனை நிலைய்	3.92	0.68	-	-	-
பேருவளை விற்பனை நிலையம்	1.89	-	-	-	-
சுவசிரிபாய விற்பனை நிலையம்	-	-	0.03	0.06	-
நிக்கவரெட்டி விற்பனை நிலையம்	-	-	-	0.49	3.10
தங்காலை விற்பனை நிலையம்	-	-	-	-	1.63
ஓய்வூதியத் திணைக்கள விற்பனை நிலையம்	-	-	-	-	0.47
மொத்தம்	**676.29**	**705.64**	**675.88**	**578.89**	**566.36**

11. **வருமானம் பகிர்ந்து சென்ற விதம் (நூற்று விகிதத்தில்)**

	2020	2019	2018	2017	2016
விற்பனைகள்	100.00	100.00	100.00	100.00	100.00
கழித்தல் :-விற்பனை செலவினங்கள்	69.77	68.77	63.04	56.56	58.42
தேறிய இலாபம்	30.23	31.23	36.96	43.44	41.58
கூட்டல் - வேறு வருமானங்கள்	(0.16)	0.56	1.05	0.99	0.01
மொத்த வருமானம்	30.07	31.79	38.01	44.43	41.59
கழித்தல் :-					
நிறுவன மற்றும் நிருவாக செலவுகள்	19.98	21.37	21.41	21.77	22.05
விற்பனை மற்றும் விநியோக செலவுகள்	10.43	11.38	12.03	11.20	11.42
நிதிச் செலவுகள்	0.82	0.90	1.06	1.42	1.55
வேறு செலவுகள்	-	-	-	-	-
மொத்த செலவுகள்	31.23	33.65	34.50	34.39	35.02
தொழிற்பாட்டு இலாபம் ∴(நட்டம்)	-1.16	-1.86	3.51	10.04	6.57
கூட்டல் -வட்டி வருமானங்கள் மற்றும் தொழிற்பாடு சாராத வருமானங்கள்	2.56	2.30	1.34	0.58	0.74
வரி குறைப்பதற்குப் பின்னர் இலாபம்.∴(நட்டம்)	1.40	0.44	4.85	10.62	7.31
கழித்தல்					
நிக்கவரெட்டி மூலிகைத் தோட்டம் (நட்டம்)	1.45	1.55	0.72	0.71	0.73
கழித்தல்					
வரிக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு	0.50	0.35	2.53	3.08	2.27
தேறிய இலாபம்	**(0.55)**	**(1.46)**	**1.60**	**6.83**	**4.31**

12. இலாப பங்களிப்பு (மில்லியன் ரூபாவில்)

(மில் ரூபா)

	2020	2019	2018	2017	2016	2015
விற்பனைகள்	676.30	705.62	675.88	578.89	566.36	519.89
கழித்தல் :-விற்பனை செலவினங்கள்	471.83	485.23	426.05	327.45	330.88	284.69
தேறிய இலாபம்	204.47	220.39	249.83	251.44	235.48	235.2
கூட்டல் - வேறு வருமானங்கள்	6.15	14.94	11.77	9.83	11.08	11.08
மொத்த வருமானம்	210.62	235.33	261.60	261.27	246.56	246.28
கழித்தல் :-						
நிறுவன மற்றும் நிருவாக செலவுகள்	135.10	150.8	144.73	126.02	124.88	112.57
விற்பனை மற்றும் விநியோக செலவுகள்	70.54	80.31	81.30	64.83	64.70	62.31
நிதிச் செலவுகள்	5.54	6.37	7.15	8.22	8.79	8.44
வேறு செலவுகள்	-	-	-	-	-	-
மொத்த செலவுகள்	211.18	237.48	233.18	199.07	198.37	183.32
தொழிற்பாட்டு இலாபம்	-0.56	-2.15	28.42	62.2	48.19	62.96
கூட்டல் - வட்டி வருமானங்கள்	17.28	16.26	9.07	3.34	4.18	4.28
தொழிற்பாடு சாராத வருமானங்கள்	2.54	1.40	0.20	0.01	0.18	0.25
நிக்கவரெட்டி மூலிகைத் தோட்டம் (நட்டம்)	(9.80)	(10.96)	(4.89)	(4.10)	(4.11)	(5.36)
வரிக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு	(3.36)	(2.40)	(17.12)	(17.80)	(12.85)	(21.10)
தேறிய இலாபம்	**6.10**	**2.15**	**15.68**	**43.65**	**35.59**	**41.03**

13. <u>உற்பத்தியை அதிகரித்தல்</u>

- மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளல்

உற்பத்திக்குத் தேவையான பெரும்பாலான மூலப்பொருட்கள் இடைத்தரகர்கள் மூலம் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்படுகின்றன. இதன் காரணமாக, பொருட்களின் மூலப்பொருட்களின் தரம் கேள்விக்குறியாகி, மூலப்பொருள் மாதிரி குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2020ம் ஆண்டு இறுதிக்குள், இப்பிரச்னைக்கு தீர்வாக, தம்பான ஆதிவாசித் தலைவர்களுடன் பேச்சு நடத்தி, அப்பகுதிகளில் கிடைக்கும் மூலப்பொருட்களை சேகரித்து, கூட்டுத்தாபனத்துக்குப் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் மூலம் கூட்டுத்தாபனத்துக்கு தரமான மூலப்பொருட்கள் கிடைப்பதுடன் மக்களின் வாழ்க்கைக்கும் பங்களிக்கிறது. அந்த மருந்துகளில் அரலு, புலு, அறுவடை மற்றும் பட்டை ஆகியவை அடங்கும். மஹியங்கனை பிரதேசத்தில் உள்ள ஏனைய மருந்து சேகரிப்பாளர்களின் உதவியையும் நாடினோம்.







கூட்டுத்தாபனத்தால் பராமரிக்கப்படும் மூலிகைத் தோட்டங்கள், மற்றும் அநுராதபுரம் பிரதேச செயலகத்தின் மூலம் மூலப் பொருட்கள் வறட்சி காலங்களில் குறைந்த விலையில் மருந்துகளை கொள்முதல் செய்யவும், மஞ்சள், கிராத்தா, இஞ்சி, நொச்சி போன்ற மூலிகை தோட்டங்கள் செய்கையை விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


மேலும், இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக காய்ந்த இஞ்சியின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதற்கு தீர்வாக, பச்சை இஞ்சியை கொள்முதல் செய்து, கழுவி உலர்த்தி, தேவையான தரமான உலர் இஞ்சியை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடிந்தது.

14. உற்பத்தி ஆற்றலை விரிவுபடுத்துதல்.

மூலதனக் கருத்திட்டங்கள்

- Automatic Powder Filling and Sealing Machine

பல ஆண்டுகளாக எங்களிடம் மூலப்பொருட்களை பொதியிடுவதற்கு போதிய வசதிகள் இல்லாததால், அதற்கான தொழிலாளர் பங்களிப்பை பெருமளவில் பெற வேண்டியிருந்தது. தயாரிப்புக்கான அதிகரித்து வரும் தேவை மற்றும் போட்டியை சந்திக்கவும் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பை உறுதி செய்யவும், 2020 ஆம் ஆண்டில் Automatic Powder Filling and Sealing இயந்திரத்தை நிறுவத் தொடங்கினோம், இது குறைந்த விலையில் பொதியிடுவதற்கு நீண்டகாலமாகத் தேவைப்பட்டதொன்றாகும்.



15. **<u>புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு</u>**

- **புதிய உற்பத்திகள்**

கௌரவ சுகாதார அமைச்சரின் முழு வழிகாட்டுதலின் கீழ், கோவிட்-19 வைரஸ் பரவுவதைத் தடுக்கும் வகையில், 24.04.2020 அன்று ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் கேட்போர் கூடத்தில், கூட்டுத்தாபனத்தின் 6 தயாரிப்புகள் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.









Ethokomarika Hand Sanitizing gel





- **சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்**

2020 சந்தைப்படுத்தலை ஊக்குவிப்பதற்காக சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் பல நடத்தப்பட்டன.

பொதுஜன சரணி நிகழ்ச்சித்திட்டம் சுகாதார அமைச்சு





இரத்தினபுரி சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்





- விற்பனை இலக்குகளை நிர்ணயித்து, நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கடன்களை வசூலித்து விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்
  இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம், ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் இணங்கிய நிலையான அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் 2030 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தால் அடையப்படவுள்ள 2030 ஆம் ஆண்டின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு ஒரு அரச கூட்டுத்தாபனமாக உறுதியளித்துள்ளது. 2015. இதன்படி, நிலையான அபிவிருத்தி இலக்குகள் வறுமை ஒழிப்பு, பசி ஒழிப்பு, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு, வளமான பணி மற்றும் பொருளாதார வளர்ச்சி மற்றும் பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி ஆகிய இலக்குகளுக்கு 2020 ஆம் ஆண்டளவில் நேரடி பங்களிப்பைச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

16. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை நிறுவுதல்

இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம் 2020 ஆம் ஆண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை 04 தடவைகள் நடாத்தியுள்ளதுடன் இதன்போது கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கிய கணக்காய்வு விசாரணைகள், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் வழங்கப்படுகின்ற கணக்காய்வு விசாரணைகள கலந்துரையாடப்பட்டு இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை சீர் செய்வதற்கு தேவையான வழிகாட்டல்கள் மேற் கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக சுகாதார, போசாக்கு மற்றும்சுதேச மருத்துவத்துறை அமைச்சின் செயலாளரின் தலைமையில் அமைச்சு மட்டத்திலான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் 3 மாதங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்பட்டுள்ளதுடன் இதன்போது கணக்காய்வு விசாரணைகளில் உள்ள தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றமும் பரிசீலனை செய்யப்பட்டது.

2020 ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர் சபையின் விபரங்கள் பின்வருமாறு.

1	திரு.எம்.எச்.என்.சமீல்	-	திறைசேரிப் பிரதிநிதி
2	திருமதி.எச்.டபள்யூ.எம்.புஸ்பலதா மெனிகே	-	பணிப்பாளர் சபை உறுப்பினர் (அமைச்சின் பிரதிநிதி)
3	திரு.பிரதீப் ஏ பீரிஸ்	-	பணிப்பாளர் சபை உறுப்பினர்
4	திருமதி ஆர்.ஜீ டீ பிரியதர்ஷினி	-	பணிப்பாளர் சபை உறுப்பினர் (சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத மருத்துவமனை அபிவிருத்தி மறறும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சு)
5	திருமதி ஆர்.ஜீ டீ பிரியதர்ஷினி	-	அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்

17. நிதி முகாமைத்துவமும் கணக்காய்வு விசாரணைகள் தொடர்பான கருத்துக்களும்

கூட்டுத்தாபனத்தின் கணக்கு முறைமைக்குள் நிலவுகின்ற பல்வேறுபட்ட குறைபாடுகளையும் முறைமையில் உள்ள குறைபாடுகள் பற்றியும் கணக்காய்வாளர் நாயகத்தினால் அவ்வப்போது கணக்காய்வு விசாரணைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு மேலதிகமாக பாராளுமன்றத்தின் பொதுக் குழுக்களினாலும் இந்த குறைபாடுகள் எடுத்துக் காட்டப்பட்டதுடன் தற்பொழுது இந்த குறைபாடுகளையும் சீர்கேடுகளையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக பணிப்பாளர் சபையின் கட்டளையின் பிரகாரம் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு 2020 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதென குறிப்பிடுகின்றேன்.

நன்றி

- சரியான வழிகாட்டல்களை மேற்கொண்ட சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத மருத்துவமனை அபிவிருத்தி மறறும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர் கௌரவ (சட்டத்தரணி) சிசிர ஜயக்கொடி அவர்களுக்கும்
- சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத மருத்துவமனை அபிவிருத்தி மறறும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சின் செயலாளர் உட்பட பதவியணியினருக்கும்.
- கூட்டுத்தாபனத்தின் மூலதன மற்றும் அறவிடல்களை அதிகரிப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய பொதுத் திறைசேரிக்கும்.
- ஒத்துழைப்பை நல்கிய ஆயுர்வேத திணைக்களத்தின் தற்போதைய ஆயுர்வேத ஆணையாளர் உட்பட பதவியணிக்கும் ஆயுர்வேத ஆராய்ச்சிக் கூடத்தின் பணிப்பாளர் உட்பட பதவியணிக்கும்.
- முடிவுறுத்தப்பட்ட மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு ஒத்துழைப்பு நல்கிய மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் விற்பனை முகவர்களுக்கும்.
- முறைமைக் கட்டுப்பாட்டு இடைஞ்சல்கள் மற்றும் தவறுகளை சீர்செய்வதற்கு வழிகாட்டிய கணக்காய்வாளர் நாயகம் உட்பட பதவியணியினருக்கும்.
- மீளாய்வு ஆண்டுக்குள் கூட்டுத்தாபன நடவடிக்கைகளை முன் கொண்டு செல்வதற்கு மெச்சத்தகு ஒத்துழைப்பை நல்கிய கூட்டுத்தாபன முகாமைத்துவத்திற்கும் பதவியணியினருக்கும் எனதும் பணிப்பாளர் சபையினதும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



சட்டத்தரணி சாகலா அபயவிக்ரம
தலைவர்
இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தானம்

நிறுவனத்தின் நிருவாக அறிக்கை

நிறுவனத்தின் நிருவாகம் என்பது பங்குதாரர்களின் (அரசு மற்றும் சமூகம், முதலீட்டாளர்கள், பணியாளர்கள், விநியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள்) வெளிப்படைத்தன்மை, துல்லியம் மற்றும் சரியான நேரத்தில் நிதி அறிக்கை செய்தல் ஆகியவற்றின் மூலம் நிறுவனத்தை வழிநடத்தும் மற்றும் கட்டுப்படுத்தும் முறையாகும்.

கூட்டிணைக்கப்பட்ட நிருவாகம் தொடர்பிலான பொறுப்பு பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும்..

- **பணிப்பாளர் சபை**

உற்பத்தி, ஆயுர்வேத மருந்து உற்பத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகள், சந்தைப்படுத்தல், பொது நிதி மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில் வல்லுநர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த நபர்களால் பணிப்பாளர் சபை உருவாக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்றுப் பணிப்பாளரான தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளரின் மற்றும் நிறைவேற்று தரம் சாராத ஐந்து பணிப்பாளர்களைக் கொண்டதே இந்த பணிப்பாளர் சபையாகும்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அல்லது கௌரவ அமைச்சரால் பணிப்பாளர் சபை நியமிக்கப்படாத போது மாதாந்தம் பணிப்பாளர் சபை கூடுகிறது. தேவைப்படும்போது விசேட கூட்டம் நடத்தவும் ஏற்பாடு செய்யப்படும்.

- **முகாமைத்துவக் குழு**

கூட்டுத்தாபன முகாமைத்துவக் குழுவின் தலைவர் பதவி கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருப்பார்.. மற்ற குழு அதிகாரிகள் கூட்டுத்தாபன முகாமைத்துவப் பணிப்பாளர், பொது முகாமையாளர், உதவிப் பொதுமுகாமையாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள்.

கூட்டுத்தாபனத்தின் அன்றாட செயல்பாடுகள், பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகளை செயல்படுத்துதல், மூலோபாய நோக்கங்களை செயல்படுத்துதல் மற்றும் தேவைப்படும்போது, கொள்கை முடிவுக்காக பணிப்பாளர் சபைக்கு பொருத்தமான பரிந்துரைகளை வழங்குதல் ஆகியவற்றை மேற்பார்வையிடுகிறது. செய்யும். முகாமைத்துவக் குழு மாதந்தோறும் கூடும்.

- **கணக்காய்வுக் குழு**

"நல்ல நிர்வாகம் மற்றும் பொது நிறுவன வழிகாட்டுதல்கள்" மற்றும் நிதிச் சுற்றறிக்கைகளின்படி கணக்காய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கணக்காய்வுக் குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுகிறது மற்றும் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுத் தரம் சாராத இயக்குநர்களைக் கொண்டுள்ளது. நிதி அமைச்சகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் குழுவின் தலைவராக உள்ளார். கூட்டுத்தாபனத்தின் செயல்பாடுகளின் கணக்காய்வு மற்றும் மதிப்பீடு கணக்காய்வுக் குழுவால் சுயாதீனமாக செய்யப்படுகிறது மற்றும் தேவைப்படும்போது, நிர்வாகத்தை வழிநடத்துகிறது. கணக்காய்வுக் குழுவின் ஒப்புதலுடன் உள் கணக்காய்வுப் பணிகள் தயாரிக்கப்பட்டு, உள் கணக்காய்வுத் திட்டத்தின்படி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுகின்றன.

- **முதலீட்டாளர் உறவுகள் மற்றும் பொதுப் பொறுப்பு**

கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் நிறுவனத்தை நிருவகிப்பது தொடர்பில் நேரொத்த அமைச்சான, சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் பொதுத் திறைசேரிக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அமைச்சாக உள்ளது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றும் வகையில், ஆண்டு அறிக்கைகள், ஆண்டுக் கணக்குகள், ஆண்டு வரவு செலவு கணக்குகள், காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் போன்றவை அந்த நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

பொது நிதி தொடர்பான இறுதி அதிகாரம் இலங்கை பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளதால், நிறுவனத்தின் முன்னேற்றம், நிதி அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு அறிக்கை உள்ளிட்ட வருடாந்த அறிக்கை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மீளாய்வுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் ஒரு இலாப நோக்கற்ற அரச நிறுவனமாக பொது முயற்சிகள் பற்றிய பாராளுமன்றக் குழுவுக்கு (COPE) பொறுப்புக்கூறும் நிறுவனமாகவும் உள்ளது.

- **ஊதியக் கொள்கை**

கூட்டுத்தாபனத்தின் சம்பளக் கொள்கையானது பொதுத்திறைசேரியின் அரச தொழில்முயற்சி திணைக்களம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரைகள் மற்றும் சுற்றறிக்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. பொது நிறுவனங்களுக்கு நிதி அமைச்சு வழங்கிய சுற்றறிக்கைகளின் அடிப்படையில் பணிப்பாளர் சபைக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

மாதாந்த உற்பத்தி மற்றும் வருகையின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் தயாரிப்பு மற்றும் வருகை ஊக்கத்தொகை மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

- **உள்ளக நிருவாகம்**

அனைத்து கொடுக்கல் வாங்கலுக்குமான உரிய அதிகாரத்தைப் பெறுவதையும், பதிவுகள், அறிக்கைகள், பரிந்துரைகள், சான்றிதழ்கள் மற்றும் ஒப்புதல்கள் நியாயமான முறையில் சரிபார்க்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் உள் கட்டுப்பாடு செயல்படுத்தப்படுவதையும் உறுதிசெய்வதற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகும்.

வேலை அடிப்படையிலான நிறுவனத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. துறைகள் அவற்றின் குறிப்பிட்ட செயல்பாடுகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன மற்றும் உற்பத்தி, தரக் கட்டுப்பாடு, பராமரிப்பு, நிதி, திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவை இதில் அடங்கும்.

முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பொது முகாமையாளர், தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்படும். ஒவ்வொரு துறையின் தலைவர்களும் நேரடியாக நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரிக்கு பொது முகாமையாளருக்கு அறிக்கை செய்கிறார்கள்.

உள்ளக கணக்காய்வுகளின் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டு, உள்ளக கணக்காய்வாளர் நேரடியாக தலைவர் மற்றும் கணக்காய்வுக் குழுவிற்கு அறிக்கை செய்வதன் மூலம் உள் கட்டுப்பாடு மேலும் பலப்படுத்தப்படுகிறது. அரசாங்க கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த கணிக்கை அறிக்கையின் அடிப்படையில், அந்தந்தத் துறைகளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான வழிகாட்டுதலைத் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வுக் குழுவும், வழங்குகின்றன.

கொள்வனவு செயல்முறையானது கொள்முதல் வழிகாட்டுதல்களின் விதிகளின் அடிப்படையில் அமைந்துள்ளது மற்றும் கொடுக்கல் வாங்கலின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு கொள்வனவுக்கும் தொடர்புடைய சுற்றறிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் நியமிக்கப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் வருவாய், மீண்டுவரும் செலவுகள் மற்றும் மூலதனச் செலவுகள் உட்பட வருடாந்த வரவு செலவுத் திட்டம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நேர்வரிசை அமைசசும், பொது திறைசேரியின் அரச தொழில்முயற்சி திணக்களம் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல MED/A/ADC/FA/20/04 2021 ஒக்தோபர் மாதம் 29

தலைவர்,

இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம்,

இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் 2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று பூர்த்தியடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்று மற்றும் பிற சட்ட ரீதியான அத்துடன் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கை.

---

1. நிதிக் கூற்று

11. அபிப்பிராயம்

இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் 2020 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று நிதி நிலைமை பற்றிய கூற்று மற்றும் அன்றைய தினம் பூர்த்திடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று உரித்து மாற்றுக் கூற்று மற்றும் அன்றைய தினம் பூர்த்தியடைந்த ஆண்டுக்கான நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கு உரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டு கொள்கைகளைக் கொண்ட 2020 டிசம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த நிதிக் கூற்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) வது உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) வது உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்ட பகுதி தொடர்பில் விபரிக்கப்பட்டுள்ள விபரங்கள் அழுத்தங்கள் இன்றி, கூட்டுத்தாபனத்தின் 2020 டிசம்பர் 31 ஆந் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அன்றைய தினம் நிறைவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் நிதிப் பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு உட்பட்டு உள்ளபடியான மற்றும் நியாயமான நிலைமையை எடுத்துக் காட்டுவது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

(அ) இலங்கை கணிப்பீட்டு நியமம் 1

(i) நியமத்தின் 27 மற்றும் 28 வது பந்தியின் பிரகாரம், 5 நிலையான வைப்புகளுக்குரிய வட்டி வருமானம் திரண்ட அடிப்படையில் கணக்கீடு செய்யாததன் காரணத்தால் மீளாய்வு ஆண்டுக்கான வட்டி வருமானம் 1,459,334 ரூபா கூடுதலாகவும், 2020 டிசம்பர் 31 ஆந் திகதியன்று ஹஹஹஹஹஹஹஹஹ வட்டி வருமானம் 4,171,080 ரூபா குறைவாகவும் நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 32 வது பந்தியின் பிரகாரம் இலங்கை கணக்கியல் நியமத்தின் மூலம் தேவையான அல்லது அனுமதியளிக்கப்பட்டிருந்தாலன்றி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் வருமானம் மற்றும் செலவு நிலுவையாகக்கூடாது. எவ்வாறாயினும் 2020 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு அப்போதைய 2 உப கட்டுநிதி கணக்குகளில் காணப்பட்ட 29,720 ரூபா வரவு மீதி அன்றையதினம் குறித்த 33 கணக்குகளில் இருந்த 610,044 ரூபா பற்று மீதிக்கு எதிராகவும், மீளாய்வு ஆண்டுக்குள் இரண்டு மூலிகைத் தோட்டங்களுக்குக் கிடைத்த 2,540,257 ரூபா வருமானம் மற்றும் 6,148,865 ரூபா வேறு வருமானங்கள் மூன்று மூலிகைத் தோட்டங்களின் 9,793,701 ரூபா செலவுக்கு எதிராக பதிலீடு செய்து நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(iii) நியமத்தின் 51 வது பந்தியின் பிரகாரம் மீளாய்வு ஆண்டுக்காக சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுகளின் பெறுமானம் அண்ணளவான ரூபாவுக்கு வட்டமிட்டு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணிப்பீட்டு நியமம் 2

பின்வரும் அவதானிப்புகளுக்கு அமைவாக 2020 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு 192,451,043 ரூபாவாக நிதிக் கூற்றில் காட்டப்பட்டிருந்த மீதிக் கையிருப்பின் ஆகு செலவு நியமத்தில் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு ஏற்ப அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(i) நியமத்தின் 25 வது பந்தியின் பிரகாரம், முதற் பெறுகை முதல் விநியோகம் நடைமுறை அல்லது பசுமை பொதுவான நடைமுறை ஆகிய ஆகு செலவு சூத்திரத்தைப் பயன்படுத்தி மீதிக் கையிருப்புகளின் ஆகுசெலவை கணக்கிட்டு கணக்கிடல் வேண்டும். பசுமை பொதுவான நடைமுறையை அடிப்படையாகக் கொண்டு மீதி கையிருப்புகளின் ஆகுசெலவுகளை கணக்கிட்டு கணக்கிடப்பட்டுள்ளதாக நிதிக் கூற்றில் தெரியப்படுத்தியிருந்தாலும் நியமனத்தின் 27 வது பந்தியின் பிரகாரம் அப்போதைய அடிப்படையில் அல்லது ஒவ்வொரு கொள்வனவுக்கும் உரிய மேலதிக பொருட் கையிருப்பு கிடைக்கும் போது அல்லது பசுமை பொதுவான கணக்கீட்டுக்காக கையிருப்பு பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை என்பதுடன் இதற்காக முதற் பெறுகை முதல் விநியோகம் நடைமுறைக்கு ஏற்ப கையிருப்பு ஆகுசெலவை கணக்கிடுவதற்காக கணினி கையிருப்பு பதிவேடு ஒன்று பேணப்பட்டிருந்தது.

(ii) பசுமை பொதுத் திட்டத்துக்காக 2020 ஜனவரி மற்றும் டிசம்பர் மாதங்களில் ஆகு செலவை பொதுவான அடிப்படையாகக் கொண்டு 2020 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு மீதி மூலிகை மூலப் பொருட்கள், மீதி முடிவுறுத்தப்பட்ட மருந்துகள் மற்றும் மீதி பொதியிடல் பொருட்களின் ஆகுசெலவு முறையே ரூபா 70,360,760, ரூபா. 96,833,832 மற்றும் ரூபா. 21,824,951 எனவும், வருட இறுதியின் கொள்வனவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டு 2020 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு மீதி காகிதாதிகள் கையிருப்பின் ஆகுசெலவு ரூபா 3,431,500 எனவும் கணக்கிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

(iii) 2020 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு நடத்தியிருந்த வருடாந்த பொருட்களின் கணிப்பீட்டின் போது பௌதீக மீதி உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலும், அன்றைய தினம் மீதி 25 காகிதாதிகள் உருப்படிகளின் ஆகுசெலவு ரூபா 456,700 கணக்கிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அன்றைய தினம் கணினி உபகரணங்களின் மீதிக் கையிருப்பின் ஆகுசெலவு ரூபா 1,947,949 சொத்துக்களாக கணக்கிடாமல் இலாபத்துக்கு எதிராக பதிவளிக்கப்பட்டிருந்தது.

(iv) பேணப்பட்டு வந்த 8 களஞ்சியங்களில் 3 களஞ்சியங்களுக்கு மாத்திரம் மேற்கொண்ட மாதிரிச் சோதனையின் ஆகுசெலவு ரூபா 842,292 ஆக இருந்த 20 மூலிகை மூலப்பொருட்கள் மற்றும் ஆகுசெலவு ரூபா 387,590 ஆக இருந்த முடிவுறுத்தப்பட்ட 12 மருந்துகள் கையிருப்பு குறைபாடுகள் மற்றும் ஆகுசெலவு 11,734,245 ஆக இருந்த 20 மூலகை மூலப்பொருட்கள் மற்றும் ஆகுசெலவு 290,222 ஆக இருந்த முடிவுறுத்தப்பட்ட 31 மருந்துகள் கையிருப்பு மேலதிகமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆனாலும் குறித்த கையிருப்பு குறைபாடு மற்றும் மேலதிகம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் நிதிப்பிரமாணம் 103, 104 மற்றும் 105 இன் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2020 டிசம்பர் 31 திகதியன்று மீதி முடிவுறுத்தப்பட்ட மருந்துகளின் கையிருப்பில் சேதமாகிய மற்றும் காலங்கடந்த முடிவுறுத்தப்பட்ட மருந்துகளின் கையிருப்பு ஆகுசெலவு ரூபா 7,301,072 இலாபத்துக்கு எதிராக பதிவளிப்பதற்கும் நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 105 இன் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2020 டிசம்பர் 31 திகதிக்கான வருடாந்த பொருட்கள் கணிப்பீட்டில் தெரியவந்த சேதம் மற்றும் காலங் கடந்த முடிவுறுத்தப்பட்ட மருந்துகள் அலகு ரூபா 19,516 மற்றும் 671 காகிதாதிகள் அலகு அத்துடன் 177 கிலோகிராம் மூலிகை மூலப்பொருட்கள் ஆகுசெலவுகள் கணக்கிடப்பட்டு கணக்கில் பதிவு செய்யப்படவில்லை எனவும் பொதியிடல் பொருட்கள் கையிருப்புகளில் உள்ளடக்கப்பட்ட சேதம் மற்றும் காலங் கடந்த கையிருப்புகளும் கணக்கிடப்படவில்லை.

(இ) இலங்கை கணக்கியல் நியமம் 8 இன் 14 வது பந்தியின் (அ) மற்றும் (ஆ) பிரிவுகளில் காட்டப்பட்டுள்ள நீபந்தனைகளுக்கு முரணாக, கடந்த வருடம் வரை பின்பற்றிய கையிருப்பு கணக்கீட்டு கொள்கை மீளாய்வு ஆண்டின் போது மாற்றப்பட்டிருந்தது என்பதுடன் நியமத்தின் 29 வது பந்தியின் பிரகாரம் கொள்கையை மாற்றியமை பற்றி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 22 விற்பனை நிலையங்களின் மீளாய்வு ஆண்டுக்குள் கடன் விற்பனை ரூபா 7,763,620 கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(உ) அனுராதபுரத்தில் அமைந்துள்ள மூலிகைத் தோட்டத்தை அபிவிருத்தி செய்து எல்லை வேலியை நிர்மாணிப்பதற்காக செலவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,808,795 மூலதனப்படுத்தப்பட்டிருந்தாலும், இதற்காக மேற்கொள்ளப்படுகின்ற வேலையின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) மொத்த ஆகுசெலவு ரூபா 5,376,250 வான தன்னியக்க அறைக்கும் இயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்காக கடந்த ஆண்டு குறித்த தொகையை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டுக்குள் குறித்த இயந்திரத்தை வழங்கி பொருத்தப்பட்டிருந்தாலும் ஆகுசெலவு மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) கடந்த ஆண்டின் வருமான வரிச் செலவு ரூபா 820,104 ஆக குறைத்து கணக்கிடப்பட்டு கணக்கு வைத்த தவறு சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2020 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு கையிருப்புச் சேதத்துக்கான ஒதுக்கீடு ரூபா 8,373,176 ஆக இருக்க வேண்டியிருந்தாலும் நிதி நிலைமை கூற்றுக்களின்படி குறித்த ஒதுக்கீடு ரூபா 11,172,466 ஆக இருப்பதனால் வேறுபாடு ரூபா 2,799,290 ஆக உள்ளது. அவ்வாறே மக்கள் வங்கியின் மீதி உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களுக்கு அமைவாக இரண்டு சேமிப்புக் கணக்குகளிலும் 2020 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு மீதி ரூபா 5,574,664 ஆக இருந்தாலும் நிதி நிலைமை கூற்றுக்களின்படி ரூபா 4,210,243 ஆக இருப்பதனால் வேறுபாடு ரூபா 1,364,421 ஆக இருந்தது. மேலும் கடந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கு அமைவாக பொதுச் செலவு முற்பணக் கணக்கில் 2019 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு மீதிக்கும் மற்றும் பதிவேட்டுக் கணக்கு 2020 ஜனவரி 01 ஆந் திகதிக்கான மீதிக்கும் இடையே ரூபா 5,458,141 க்கான வேறுபாடு காணப்பட்டதுடன், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 2020 டிசம்பர் 31 ஆந் திகதிக்காக ரூபா 9,927,344 மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக போதுமான ஆவணங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உரித்து மாற்று கூற்றுக்கு முன்னரான ஆண்டுகள் சீராக்கலாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 8,906,193 இல் ரூபா 6,047,654 பதிவேட்டுக் குறிப்பின் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஐ) 2020 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு ரூபா 23,819,450 திரட்டிய செலவுகளில் உள்ளடக்கப்பட்ட முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட ரூபா 14,162,022 சீராக்கப்படாத வரவு மீதி மற்றும் செலுத்தப்படாத முத்திரை வரி ரூபா 260,839 சரியாக உறுதிப்படுத்துவதற்குப் போதுமான சான்றுகள் முன்வைக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக எனது கணக்காய்வுகளை மேற்கொண்டுள்ளேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு மற்றும் இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு ஆகிய பகுதிகளில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயங்களின் அடிப்படையில் சமர்ப்பிப்பதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சாட்சிகள் போதுமானதும் மற்றும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை - 2020 இல் உள்ள பிற தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையில் தினத்துக்குப் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற கூட்டுத்தாபனத்தின் 2020 ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனாலும் நிதிக்கூற்று மற்றும் இது தொடர்பில் எனது கணக்காய்வு அறிக்கையின் உள்ளடக்கப்படாத தகவல்கள், பிற தகவல்கள் எனப் பொருள்படும் இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவமே பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுகள் பற்றிய எனது கருத்தில் பிற தகவல்கள் பற்றி தெரியப்படுத்தப்பட மாட்டாது என்பதுன் அது பற்றிய எந்த சான்றிதழையோ கருத்தையோ நான் தெரிவிக்க மாட்டேன்.

நிதிக்கூற்றுகள் மீதான எனது கணக்காய்வின் அடிப்படையில் எனது பொறுப்பு, மேலே அடையாளம் காணப்பட்ட பிற தகவல்களைப் பெற்றவுடன் அவற்றைப் படித்து மற்ற தகவல்கள் நிதிக் கூற்றுக்கள் அல்லது கணக்காய்வில் சேகரிக்கப்பட்ட எனது அறிவுக்கு அல்லது வேறு எந்த வடிவத்தில் பொருந்தவில்லையா என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் வருடாந்திர அறிக்கை - 2020 ஐப் படிக்கும்போது, அதில் அளவு தவறான விளக்கங்கள் உள்ளன என்று நான் முடிவு செய்தால், அந்த உண்மைகள் நிர்வாகத் தரப்புகளுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இதுவரையில் திருத்தம் செய்யப்படாத தவறான கருத்துக்கள் இருப்பின், அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின்படி உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் அவற்றைச் சேர்ப்பேன்.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவம் மற்றும் நிருவாகத் தரப்பின் பொறுப்புகள்

